கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 25.03.2012




- முதற்பக்கம்
- ஆனந்தசங்கரி
- ஈ.பி.ஆர்.எல்.எப்
- ஈ.பி.டி.பி
- ஈரஅனல்
- நெருப்பு
- புளொட்
- தூ
- டெலோ நியூஸ்
- இலங்கைநெற்
- மீன்மகள்
- சூத்திரம்
- மகாவலி
- உண்மைகள்
- கவிமலர்
- திருத்தியம்
- அலை
- பூந்தளிர்
- எங்கள்தேசம்
- சலசலப்பு
- நோயல்நடேசன்
- வளர்பிறை
- எங்கள்பூமி
- தமிழ்யுகே
- புயல்
- புளொட்யுகே
- யாழ்முஸ்லீம்
- புண்ணியாமீன்
- யவ்னா ருடே
- எஸ்.ஆர்.லெம்பட்
- பஷீர்
- தமிழ்பூஎன்
- கவசங்களைதல்
- தூங்காத கண்கள்
- யாழ்மண்
- தமிழ்குரல்
- துருவம்
- தினசரி
- இலங்கை முஸ்லீம்
- ஆயுள்
- சமத்துவம்
- ARRR
- Asientribune
- The lka academic
- Tamil Week
- The Hindu
- Daily News
- Sunday Times
- Daily Mirror
- The island
- The Sunday Leader
- ColomboPage
- Sunday Times
- CNN
- BBC
- Newsnow


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (41)

### 41. வர்த்தக நிறுவனங்களைக் கையகப்படுத்த புலிகள் மேற்கொண்ட தந்திரம்!

புலிகளின் இந்த வதை முகாமில் அவர்களுக்கு எதிரான இயக்கங்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ உட்பட பல்வேறு மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். அதுமாத்திரமின்றி புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 'குற்றமிழைத்தவர்கள்' பலரும்கூட இங்கு விசாரணைக் கைதிகளாக இருந்தனர். இவர்கள் தவிர தனிப்பட்ட குற்றச்செயல்களான கொலை, களவு போன்றவற்றில் ஈடுபட்டவர்களும் இருந்தனர். எல்லாவிதமான கைதிகளையும் கொண்ட ஒரு சாம்பாராக இந்தச் சிறை இருந்தது.

புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர ஏனைய கைதிகள் எப்பொழுதும் ஓர் அச்சமான சூழ்நிலையிலேயே இருந்தனர். ஆனால் புலி இயக்கத்தைச் சேர்ந்த கைதிகள் மிகவும் சாதாரணமாக, ஒரு சந்தோசமான மனநிலையிலேயே இருப்பது போலத் தோன்றியது. அவர்கள் எதற்காகவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தமக்கு மேலேயுள்ள, தம்மை விசாரணை செய்யும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களைக்கூட அவர்கள் பெரிதாகச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. அவர்களில் வயதில் குறைந்த ஒருவன், தனது சக போராளி ஒருவனை ஏதோ கோபதாபத்தில் தனது கையிலிருந்த 'கிரனைட்'டை வீசிக் கொலை செய்த குற்றத்தில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தான். அவன்கூட எந்தநேரமும் சிரிப்பும் கும்மாளமுமாகத்தான் இருந்தான்.

சாதாரண கிராமப்புறங்களைச் சேர்ந்த இந்தப் புலி உறுப்பினர்கள் எவ்வாறு இவ்வாறான ஒரு மன நிலைக்கு வளர்த்து எடுக்கப்பட்டார்கள் என, நான் பல தடவைகள் ஆச்சரியப்பட்டதுண்டு. எல்லாமே புலிகள் அவர்களுக்கு வழங்கும் குரூரமான பயிற்சிகள்தான் காரணம் என்பதைப் போகப்போகப் புரிந்து கொண்டேன். நான் வெளியில் இருந்த காலத்தில் இந்த மாதிரியான சில சம்பவங்களைக் கேள்விப்பட்டிருந்தேன். எமது அயல் கிராமத்தைச் சேர்ந்த புலி உறுப்பினன் ஒருவனைக் கொண்டே, வவுனிக்குளத்தில் இருந்த அவனது தனப்பனாரின் சொந்தச் சகோதரரை (அவனது சிறிய தகப்பன்) புலிகள் சுடுவித்துப் படுகொலை செய்ததை நான் அறிவேன்.




அதேபோல இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில், எனது நெருங்கிய உறவினரான ஒரு பையன் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான். அவனுக்கும் அவனையொத்த புதிதாக இணைந்தவர்களுக்கும் முதலில் கொடுத்த வேலை, பளை வைத்தியசாலைக்கு அருகாமையில் கண்டி வீதியில் வந்து கொண்டிருந்த ஒரு பஸ்சை நிறுத்தி, அதிலிருந்த பிரயாணிகளை இறக்கிவிட்டு அந்த பஸ்சுக்கு பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தியதுதான். அதற்கான காரணம், அந்த பஸ் இந்தியாவில் செய்யப்பட்ட 'அசோக் லேலன்ட்' பஸ் என்பதுவே. இந்தச் சம்பவத்துடன் அந்தப் பையன் இயக்கத்தைவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்துவிட்டான். அதில் சுவாரசியம் என்னவென்றால், அந்த பஸ்சை அவர்கள் கொளுத்தும் போது, இயக்கம் தமக்கு வழங்கியிருந்த இந்தியத் தயாரிப்பான 'கிப்ஸ்' ரக சாரத்தையே அவர்கள் எல்லோரும் அணிந்திருந்தது என்று அவன் சொன்னதுதான்!

அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளில் முக்கியமானவர்களில் ஒருவர், புலிகளின் வவுனியா பொறுப்பாளராக இருந்தவர். (திலீபன் என்ற பெயர் என ஞாபகம்) இரண்டு சிங்களக் கைதிகளும், விடத்தல்தீவைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் கைதியும் கூட இருந்தனர். இந்த சிங்களக் கைதிகளில் ஒருவர் வயோதிபர். அவர் ஒருவருடனும் கதைக்காமல் எப்பொழுதும் அச்சத்துடனேயே இருந்தார். மற்றவர் சற்று இளமையானவர். அவர் பெயர் பண்டா. அவர் எல்லோருடனும் சகஜமாகப் பழகினார். தான் ஜே.வி.பி உறுப்பினர் எனச் சொன்னார். அவர்கள் இருவரும் வவுனியாவுக்கு அருகிலுள்ள மடுக்கந்த என்னும் சிங்களக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். காட்டில் தடி வெட்டுவதற்காகச் சென்ற பொழுது, அங்கு வேவு பார்ப்பதற்காகப் (றெக்கி எடுப்பதற்காக) பதுங்கியிருந்த புலிகளிடம் அகப்பட்டுக் கொண்டனர். அவர்களை விட்டுவிட்டால் இராணுவத்துக்குத் தகவல் போய்விடும் என்பதற்காக, புலிகள் அவர்களைப் பிடித்து வந்து இங்கு அடைத்து வைத்திருந்தனர்.

அவர்களை உயிருடன் பிடித்து வந்தது ஓரளவுக்குப் பரவாயில்லை. ஏனெனில் இப்படியானவர்களைப் புலிகள் சந்திக்க நேரிட்டால், கொலை செய்து விடுவதுதான் வழமை. பிற்காலத்தில் நான் புலிகளின் சிறையில் கேள்விப்பட்ட ஒரு தகவல் என்னை அதிர்ச்சியில் உறைய வைத்தது. புலி உறுப்பினர்களில் சிலர் வேவு பார்ப்பதற்காக நெடுங்கேணிக்கு அப்பால் உள்ள மணலாறுப் பகுதிக்குப் போயிருக்கிறார்கள். அங்குள்ள இராணுவ முகாமொன்றுக்கு அருகிலுள்ள காட்டில் அவர்கள் பதுங்கி இருக்கும் போது, சில சிங்களக் கிராமவாசிகள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என விறகு பொறுக்குவதற்காக அங்கு வந்திருக்கிறார்கள். புலிகள் பதுங்கி இருப்பதைக் கண்டதும் அவர்கள் ஓட முற்பட்டிருக்கிறார்கள்.



ஆனால் புலிகள் அவர்களை ஓட விடவில்லை. சுற்றிவளைத்து எல்லோரையும் பிடித்துவிட்டனர். அவர்களை விட்டால் இராணுவத்துக்குத் தகவல் போய்விடும். அவர்களைத் தமது பகுதிக்குக் கொண்டு வந்து தடுத்து வைக்கவும் புலிகள் எண்ணவில்லை. எனவே அவர்களை அனைவரையும் கொன்றுவிடுவது என புலிகள் முடிவுசெய்து விட்டனர். ஆனால் அவர்களைச் சுட்டுக் கொன்றால், இராணுவத்துக்கு சூட்டுச் சத்தம் கேட்டுவிடும். எனவே அவ்வளவு பேரையும் கத்தியால் வெட்டியே புலிகள் கொலை செய்திருக்கிறாகள்! எனக்கு இந்த சம்பவத்தை சொன்ன புலி உறுப்பினன், அந்த இடத்தில் இதைத்தவிர தமக்கு வேறு வழி இருக்கவில்லை எனச் சர்வசாதாரணமாகச் சொன்னான். என்னே மகா கொடுமை!

வேறு ஒருநாள் திடீரென 3 சிங்களவர்களை தலையில் காயங்களுடன் அங்கு கொண்டு வந்தார்கள். பின்னர் விசாரித்துப் பார்த்ததில், அவர்கள் முதலில் இந்தச் சிறையில் இருந்து விசாரணை முடிவுற்ற பின்னர் நாவற்குழி – கோவிலாக்கண்டியில் உள்ள புலிகளின் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு (பண்டிதர் நன்னடத்தை முகாம்) அனுப்பப்பட்டதாகவும், அவர்கள் அங்குள்ள கடல் ஏரியைத் தாண்டி பூநகரியில் உள்ள இராணுவ முகாமை நோக்கி தப்பியோட முற்பட்ட போது கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிய வந்தது. சும்மாவே புலிகளிடம் அகப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கிடையாது. அப்படியிருக்க தப்பியோட முயன்றவர்கள் என்றால் சொல்லவா வேண்டும்?

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த முஸ்லீம் இளைஞனைப் பொறுத்த வரையில், வவுனியாவிலிருந்து பொருட்களை வாங்கிவந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விற்கும் போர்வையில் இராணுவத்துக்காக உளவு பார்த்தவன் என்பதுதான் அவன் மீதான குற்றச்சாட்டு. அதற்காக அவனைத் தினசரி பெரிய சங்கிலி (சின்னச் சங்கிலி என்றும் ஒருவன் உண்டு) என்ற விசாரணையாளன் அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்த முஸ்லீம் இளைஞனோ அவர்களது குற்றச்சாட்டை கடைசிவரை மறுத்த வண்ணமே இருந்தான். எவ்வளவோ அடி அடித்தும் அவன் அழவில்லை. சிறையில் உள்ளவர்களிடம் அதிகம் கதைப்பதும் இல்லை. அவனது உடம்பு இரும்பால் ஆனதா என சிறையில் இருந்தவர்கள் அதிசயித்த வண்ணம் இருந்தனர்.

இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் புலிகள் இயக்கத்தின் தலைமையிலுள்ள பெரும்பாலானவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாகையால் தன்னை விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். இன்னொருவர் மில்க்வைற் சோப் நிறுவனத்தின் உரிமையாளர் கனகராசாவினதும், அவரது மைத்துனர் அண்ணா கோப்பி தொழிலக உரிமையாளர் நடராசாவினதும் நெருங்கிய உறவினரான இணுவிலைச் சேர்ந்த



Yarl TV

புலிகளின் வதை முகாம்களில் ஒ... ஆண்டுகள் துன்... தோழர் மணிய... அனுபவத்தொட...

சிங்களவர்கள் நாங்கள்

யாழ்ப்பாணத்தி... அவலம்!

பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்... புலிகளின் உள்ள... போராட்டம் (பகுதி...

பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்... புலிகளின் உள்ள... போராட்டம் (பகுதி...

ராஜீவ் கொலையாளிக... குற்றப் பின்னண...

தமிழ் மக்கள் இ... வரும் சந்தர்ப்ப...

றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள்

றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள்

ஒருவராவார். அவரது மோட்டார் சைக்கிளை புலி உறுப்பினன் ஒருவனுக்கு இரவல் கொடுக்கவில்லை என்பதற்காக, பொய் குற்றச்சாட்டின் பேரில் அவரைக் கைதுசெய்திருந்தனர். அவருக்கு அங்கு செய்த சித்திரவதைகளின் காரணமாக அவர் மனோரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார். இதேபோல, சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த குமாரசாமி என்ற கிராம சேவையாளர் தனது உழவு இயந்திரத்தைப் புலிகளின் தேவைக்குக் கொடுக்கவில்லை என்பதற்காகக் கைதுசெய்யப்பட்டு கொண்டு வரப்பட்டிருந்தார்.

ஒருமுறை வெளியிலிருந்து வந்த புலிகளின் புலனாய்வாளன் ஒருவன் என்னை விசாரணை செய்தான். அப்பொழுது அவன் மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலையில் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கு ஏதாவது பங்குகள் இருக்கின்றதா எனத் துருவித்துருவிக் கேட்டான். மில்க்வைற் தொழிற்சாலையில் எமது கட்சித் தொழிற்சங்கமே செயற்பட்டு வந்ததும், அங்கு அத்தொழிலாளர்களுக்கு சம்பளமும் இதர வசதிகளும் குறைவு என்றபடியால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்ததும், வேலை நிறுத்தம் செய்த அவ்வளவு பேரையும் முதலாளி வேலை நீக்கம் செய்ததும் நான் அறிந்த விடயங்கள். தொழிலாளர்களுக்கான தொழில் நீதிமன்ற வழக்கில், எமது தொழிற்சங்கம் தொழிலாளர் பக்கமும், தமிழரசுக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி மு.ஆலாலசுந்தரம் முதலாளியின் பக்கமும் வாதிட்டதையும் நான் அறிவேன்..

மில்க்வைற் முதலாளியுடன் எமக்கு தொழிலாளர் நலன் சம்பந்தமாக மோதல் இருந்தாலும், பிற்காலத்தில் முதலாளி கனகராசா யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள எனது கடைக்கு சில நேரங்களில் வந்து, தனது 'மில்க்வைற் செய்தி' என்ற பத்திரிகையைத் தந்து அளவளாவிவிட்டுச் செல்வதும் உண்டு. ஆனால் நான் அறிந்த வரையில் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கும் மில்க்வைற் தொழிலகத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் விடயமென்னவென்றால், கனகராசாவின் இணுவிலைச் சேர்ந்த பெறாமகன் ஒருவர் என்.எல்.எப்.ரி இயக்கத்தில் இணைந்திருந்தார். எனவே அவரை வைத்து மில்க்வைற் தொழிற்சாலைக்கும் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கும் ஒரு முடிச்சுப் போட்டு, அந்தத் தொழிலகத்தைக் கையகப்படுத்தலாமோ என, சில புலி 'மூளைகள்' யோசித்திருக்கின்றன.

இதேபோல யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு வீதியில் பிரபலமாக இயங்கி வந்த ஆர்.ஜீ ஸ்ரோர்ஸ் என்ற வியாபாரத்தலத்தின் உரிமையாளரின் உறவினர் ஒருவர் என்.எல்.எப்.ரி இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார். எனவே அந்த வியாபாரத்தலத்திலும் என்.எல்.எப்.ரி இயக்கத்தின் முதலீடுகள் இருக்கின்றனவா என என்னைத் துருவினர்.




அதுமட்டுமின்றி, யாழ்ப்பாணத்தில் மிகப்பிரபலமான றேடியோ நிறுவனமான 'றேடியோஸ் பதி' என்ற வர்த்தக ஸ்தாபனத்திலும் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கு பங்குகள் உண்டா என என்னை விசாரித்தனர். அதற்குக் காரணம் றேடியோஸ் பதி உரிமையாளர் பூபதியின் சகோதரரான எழுத்தாளர் சசி.கிருஸ்ணமூர்த்தி, என்.எல்.எப்.ரியின் ஸ்தாபகர் தோழர் விசுவானந்ததேவன் பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் அங்கு பட்டப்படிப்பை மேற்கொண்டதுடன், எமது கட்சியுடனும், என்.எல்.எப்.ரி இயக்கத்துடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததுமாகும். (சிறந்த திரைப்பட விமர்சகரான தோழர் சசி.கிருஸ்ணமூர்த்தி பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும் பணியாற்றியவர். அவர் விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்துவிட்டு 'லயன் எயர்' விமானத்தில் கொழும்புக்குப் பயணித்துக் கொண்டிருக்கையில், புலிகள் பூநகரியில் வைத்து அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதால் உயிரிழந்தவர். அந்த விமானத்தில் அவருடன் நானும் கொழும்புக்குப் பயணிக்க இருந்தும், விமானச்சீட்டுக் கிடைக்காததால் தப்பிப் பிழைத்தேன்)

இந்த நிறுவனங்களில் எல்லாம் என்.எல்.எப்.ரியின் பங்குகள் இருக்கின்றனவா எனப் புலிகள் விசாரித்ததிற்குக் காரணம், இலாபத்தில் இயங்கிய இந்த நிறுவனங்களைத் தாம் எடுத்துக் கொள்வதற்காகவே. அதுமட்டுமல்லாமல், என்.எல்.எப்.ரி இயக்கம் 'ஹற்றன் நாஸனல் வங்கி'யில் நடாத்திய ஒரு கொள்ளையில் பல லட்சம் ரூபா பணத்தையும், பெருந்தொகையான தங்க நகைகளையும் கைப்பற்றியிருந்தனர். அந்தப் பணம் எங்கெங்கே, யார் யாரிடம் இருக்கின்றது என்பதை அறிவதில் புலிகள் மிகவும் தீவிரமாக இருந்தனர். என்.எல.;எப்.ரியைச் சேர்ந்த சிலர் இந்த வர்த்தக நிறுவனங்களுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால், வங்கியில் கொள்ளையிடப்பட்ட பணம் இந்த நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாக ஒரு பொய்க்கதையை உருவாக்கி, அந்த நிறுவனங்களைக் கையகப்படுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது. ஆனால் அதில் துளியும் உண்மையில்லாதால் அவர்களது நோக்கம் ஈடேறவில்லை.




அந்த ஹற்றன் நாஸனல் வங்கிக் கொள்ளைப் பணமும் நகைகளும்தான், என்.எல்எப்.ரி இயக்கத்தில் வேறு நோக்கங்களுடன் இணைந்திருந்த சிலரின் உள்ளாந்த ஆசைகளைத் தூண்டியது என்பதும், அந்த இயக்கத்துக்குள் பிளவு ஏற்பட அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதும், என்.எல்.எப்.ரி இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் தோழர் வி.விசுவானந்ததேவன் என்னிடம் நேர்மையுடன் ஏற்றக்கொண்ட ஒரு விடயமாகும். கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை, கொள்ளை என்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை என்ற எமது தெளிவான அடிப்படை நிலைப்பாட்டை தாம் மீறி விட்டோம் என்பதை, தோழர் விசுவானந்ததேவன் பின்னர் சுய விமர்சன ரீதியில் ஏற்றுக்கொண்டார்.

இறுதியில் அந்தப் பணத்தின் ஒருபகுதி ஒரு சில புல்லுருவிகளின் கைகளில் சிக்கி, அது அவர்களின் சொந்த வாழ்க்கைக்கு பயன்படுத்தப்பட்டதுடன், அவர்கள் இன்று சில புலம்பெயர் நாடுகளில் புலி விசுவாசிகளாகவும் மாறி, என்.எல்.எப்.ரி இயக்கத்தின் இலட்சியங்களுக்குத் துரோகமிழைத்தவர்களாக மாறி வாழ்கின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

தொடரும்.....

முன்னைய பதிவுகள்